
# பெருமையும்

# தாழ்மையும்



பாடம் 3 ஏப்ரல் 18, 2026


“தன்னைத்தான்
உயர்த்துகிறவன்
எவனும்
தாழ்த்தப்படுவான்,
தன்னைத்தான்
தாழ்த்துகிறவன்
உயர்த்தப்படுவான்
என்றார்.”
(லூக்கா 14:11)

என்னிடம் மதிப்புமிக்கது எது? அதற்கு பதிலளிப்பது ஒரு கடினமான கேள்வி.



நான் அதிகம் பேசினால் (அது ஒரு பெருமிதத்திற்குரிய நிலை என்றாலும்), நான் எத்தகையவனாக இருக்கிறேனோ அல்லது என்னவெல்லாம் கொண்டிருக்கிறேனோ – அவை அனைத்தையும் நானே சுயமாக சாதித்தேன் என்பதை நான் ஒப்புகொள்கிறேன்.

தேவன் என்னை தம் மகனாக கருதுவதால், நான் நிறைய பேசினால் என்ன? நான் ஏதும் கூறாமல் இருந்தால் (ஒரு பணிவான நிலை), நான் எத்தகையவனாக இருக்கிறேனோ அல்லது என்னவெல்லாம் கொண்டிருக்கிறேனோ – அவை அனைத்தும் தேவனிடமிருந்தே வந்தவை என்பதை நான் ஒப்புகொள்கிறேன்.

எனக்கு சுயமதிப்பு இல்லாததால் நான் ஏதும் சொல்லாமல் இருக்கிறேனா?

## பெருமையின் உதாரணங்கள்



லூசிபர்



இயேசுவின் சீஷர்கள்

## தாழ்மையின் உதாரணங்கள்



ஆயக்காரன்



மோசே



இயேசு, ஒரு சிறந்த உதாரணம்

# பெருமையின் உதாரணங்கள்


# லூசிபர்

"ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்." (1 யோவான் 2:16)



நாம் பெருமையைப் பற்றி பேசுவதனால், இந்த உணர்வு முதலில் எவரிடம் தோன்றியதோ, அவரைப் பற்றியே பேச வேண்டும்: லூசிபர். தன் நிலையோடு திருப்தியடைந்துவிடாமல், அதைவிட உயர்ந்ததொரு நிலைக்கு உயர அவர் தீர்மானித்தார். அவர் தன்னை எத்தனைக்கு உயர்த்திக் கொள்ள விரும்பினாரென்றால், தேவனுடைய சிம்மாசனத்தையே ஆக்கிமிக்க வேண்டும் என்று ஏங்கத் தொடங்கினார் (ஏசாயா 14:12-14).

நமக்கு விருப்பமான எதையும் செய்வதற்கும், நாம் விரும்பும் எதையும் சொந்தமாக்கி கொள்வதற்கும், புகழ் அல்லது செல்வத்தை ஈட்டித் தரும் பதவிகளை அடைவதற்கும் ஆன விருப்பத்தை நாம் "மரபு வழியாக பெற்றிருக்கிறோம்". இதை தான் இவ்வுலகம் நமக்கு வழங்குகிறது (1 யோவான் 2:16).



ஆனால் அனைத்து பெருவிருப்பங்களும் அகங்காரம் ஆகிவிடுவதில்லை. ஒரு குழந்தையின் வெற்றியிலிருந்து பெறப்படும் மனநிறைவோ அல்லது தனிப்பட்ட லட்சியமோ, அவசியமாகவே ஒரு ஆரோக்கியமற்ற அகங்காரம் ஆகிவிடுவதில்லை.



நாம் நினைவில் கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம் என்னவென்றால், நமது உடைமைகள், திறன்கள் மற்றும் சாதனைகள் ஆகியவை நமது மதிப்பை தீர்மானிப்பதில்லை. நமது வாழ்வில் இறைவன் செய்யும் காரியங்களுக்காக அவருக்கு மகிமை செலுத்தாமல் இருப்பதே அகங்காரம் ஆகும்.

# இயேசுவின் சீஷர்கள்

"அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று." (லூக்கா 22:24)



அவர்கள் இயேசுவோடு 3 ஆண்டுகளுக்கும் மேலாக கழித்திருந்தார்கள். அவர் சற்று முன்பு தான் அவர்களுடைய பாவங்களை கழுவி, அனைவருக்காகவும் சிந்தப்படவிருக்கும் தனது இரத்தத்தைப பற்றி கூறியிருந்தார். ஆயினும், அவர்கள் இரவு உணவு அருந்திக் கொண்டிருந்த போது, அவர்களுடைய உரையாடல் இவை எவற்றோடும் தொடர்பில்லாததாயிருந்தது: அவர்களில் மிக பெரியவர் யார் என்பதே அந்த உரையாடலாக அமைந்திருந்தது? (லூக்கா 22:24).



தங்கள் பெருமையின் காரணமாக, உச்சபட்ச இடத்தை அடைய தாங்களே தகுதியானவர்கள் என்று அவர்கள் நம்பினார்கள். தங்கள் உணர்வுகளின் தீவிரத்தை உணர அவர்கள் தவறிவிட்டார்கள். தங்கள் பெருமையினிமித்தம் அவர்கள் தங்கள் தேவனை தங்கள் இருதயத்திலிருந்து விலக்கி தள்ளி கொண்டிருந்தார்கள்.





இயேசு நேரடியாகவே விஷயத்திற்கு வந்தார்: "நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்." (லூக்கா 22:27). வேறு வார்த்தைகளில் சொல்வதானால்: உங்கள் குருவைப் போல நீங்களும் சிறந்தவராக திகழ விரும்பினால், பிறருக்கு சேவை செய்யுங்கள்.

பிறர் நமக்கு சேவை செய்ய நாம் தகுதியானவர்கள் என்று நமது அகந்தை நமக்கு சொல்கிறது (நாம் அவர்களை விட சிறந்தவர்கள்). தாழ்மையான ஊழியர்களாக மாறுவதற்கு நமக்கு தேவனுடைய அருள் தேவை.

# தாழ்மையின் உதாரணங்கள்

# ஆயக்காரன்

"ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். " (லூக்கா 18:13)

ஒரு பரிசேயன், தான் செய்த நற்செயல்களையும், விண்ணுலகின் முன் தனக்கிருந்த தகுதிகளையும் குறித்து தேவனிடம் எடுத்துரைத்து கொண்டிருந்தான். ஆனால் இயேசு, அவன் தேவனிடம் அல்ல "தனக்குள்ளே ஜெபம்பண்ணினான்" என்று கூறுகிறார் (லூக்கா 18:11-12). பெருமைக்கு இது ஒரு சிறந்த உதாரணம்.





ஆயக்காரன் தேவனிடம் உதவி வேண்டிக் கொண்டிருந்தான்: ஏனெனில், அவன் ஒரு பாவி (லூக்கா 18:13). தேவனின் முன் தன்னை பணிவுடன் சமர்பித்தான், அவனல்ல "இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான்" ஏனெனில் "தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" (லூக்கா 18:14).

நாம் நமது பாவத்தை ஒப்புக்கொண்டு கிறிஸ்துவின் உதவியை கேட்கும் போது உண்மையான தாழ்மை தொடங்குகிறது. பின்பு...


- நாம் மற்றவர்களை தாழ்ந்தவர்களாக கருதமாட்டோம் (பிலிப். 2:3)
- நாம் பொது அங்கிகாரத்தை நாட மாட்டோம் (லூக்கா. 14:7-11)
- மற்றவர்கள் நமக்கு அங்கிகாரம் அளிப்பதை நாம் அனுமதிப்போம் (நீதி. 27:2)
- நாம் தேவனுடைய அருளை பெறுவோம் (யாக்கோபு 4:6)
- நாம் அந்த அருளை பிறருக்கு வழங்குவோம் (1 பேதுரு 4:10)





“விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு,” (எபிரேயர் 11:24-25)

# மோசே




மோசே எகிப்தின் பார்வோனாக பொறுப்பேற்க பயிற்றுவிக்கப்பட்டார். அவர் ஒரு சிறந்த உத்தியாளராகவும், மிகுந்த அறிவுத்திறன் கொண்டவராகவும் திகழ்ந்தார் (அப் 7:22). 40 வயதில், அவர் இதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, தன் மக்களுடன் இணைய முடிவ செய்தார் (எபிரேயர் 11:24-25).

அவனே அந்த மீட்பர்! அவரது வலிமைமிக்க கரம் தன் சகோதரர்களை விடுவிக்கும்! அது ஒரு பெரும் தவறு. அத்தகைய பெருமையை அவர் தன் உள்ளத்தில் சுமந்திருந்தவரை, தேவனால் அவரை பயன்படுத்த முடியவில்லை.

பாலைவனத்தில் தேவனோடு இணைந்திருந்து கழித்த மேலும் 40 ஆண்டுகள், அவரை மிகவும் தாழ்மையான ஒரு மனிதராக மாற்றின(எண். 12:3). இப்போது கொள்ளை நோய்களை அனுப்புவதற்கும்; செங்கடலை கடப்பதற்கும்; பத்துக் கட்டளைகளை பெறுவதற்கும்; தேவனோடு நேரடியாக பேசுவதற்கும்; பாறையை அடிப்பதற்கும் தேவனால் அவரை பயன்படுத்தபட முடிந்தது... தான் செய்த செயல்களுக்கு தானே உரிமை கொண்டாடி, பெருமையை பாராட்டியதற்காக கிடைத்த தண்டனையைக்கூட, அவரால் பணிவுடன் ஏற்றுக்கொள்ள முடிந்தது (எண். 20:10-12).

பணிவு என்பது நம்மிடையே தானாகவே தோன்றுவதில்லை: மாறாக, ஒவ்வொரு நாளும் தேவனை வேண்டி, அவர் நம்முள் அதனை ஊற்றும்படி நாம் கேட்க வேண்டும் என்பதை மோசேயின் எடுத்துக்காட்டு நமக்கு உணர்த்துகிறது.

# இயேசு, ஒரு சிறந்த உதாரணம்

"அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்." (பிலிப்பியர் 2:8)







இயேசு மனித உருவெடுப்பதற்கு முன்பு கொண்டிருந்த அந்த பெருமையை, இவ்வுலகில் எவரும் இதுவரை பெற்றதில்லை - இனி பெறபோவதுமில்லை. ஆயினும் நம்மீது கொண்ட அன்பினால் அவர் அனைத்தையும் துறந்தார். அத்தகைதொரு இழிவுறுதலுக்கு முன்னால், நம்மிடம் உள்ளவை, நாம் எத்தகையோர், அல்லது நாம் எதிர்காலத்தில் எத்தகையோராக ஆகக்கூடும் - இவையனைத்தையும் நாம் ஒப்பிட்டு பார்க்கையில் மிகவும் மங்கிப்போகின்றன நாம் அவருடைய கிருபையின் செயலை புரிந்து கொண்டு, அவருடனான உறவிற்கான அவருடைய அழைப்பிற்கு பதிலளிப்போம் என்னும் நம்பிக்கையில், மனிதகுலத்திற்காக மரிப்பதற்காக இயேசு பரலோகத்தை துறந்தார் (பிலிப். 2:5-8). அவர், சந்தேகத்திற்கிடமின்றி, பணிவிற்கு ஒரு மிகசிறந்த எடுத்துக்காட்டு.



"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;" (பிலிப். 2:5).

இந்த உதாரணத்தை பின்பற்றி, "ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக." (பிலிப். 2:3-4).

சங்கீதம் 138

“உம்மை என் முழு இருதயத்தோடும் துதிப்பேன்; தேவர்களுக்கு முன்பாக உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன்; உமது சகல பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்.

நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளினீர்; என் ஆத்துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்;

கர்த்தாவே, பூமியின் ராஜாக்களெல்லாரும் உமது வாயின் வார்த்தைகளைக் கேட்கும்போது உம்மைத் துதிப்பார்கள்.

கர்த்தரின் மகிமை பெரிதாயிருப்பதினால், அவர்கள் கர்த்தரின் வழிகளைப் பாடுவார்கள்.

கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார்; மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார்.

நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர்; என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர்; உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும்.

கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது; உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக.”



“சுய அன்பு, தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளுதல், மற்றும் பெருமை ஆகியவற்றில் மிகுந்த பலவீனம் உள்ளது; ஆனால் தாழ்மையில் மிகுந்த வலிமை உள்ளது. நாம் நம்மை பற்றியே பெரிதாக நினைத்துக்கொள்ளும் போது நமது கண்ணியம் காக்கப்படுவதில்லை, மாறாக நமது சிந்தனைகள் அனைத்திலும் தேவனே நிறைந்திருந்து, நமது இதயங்கள் மீட்பர் மீதான அன்பாலும் ஒளிவிசும்போது தான் நமது கண்ணியம் நிலைநிறுத்தப்படுகிறது. குணநலனில் உள்ள எளிமையும் இதயத்தின் தாழ்மையும் மகிழ்ச்சியைத் தரும். அதே வேளையில், தற்பெருமையானது மனநிறைவின்மை, புலம்பல் மற்றும் தொடர் ஏமாற்றங்களையே கொண்டுவரும். நம்மைப் பற்றி குறைவாகவும், பிறரை மகிழ்ச்சிபடுத்துவது பற்றி அதிகமாகவும் சிந்திக்க கற்றுக்கொள்வதே நமக்கு தெய்வீக வலிமையை பெற்றுத் தரும்.”

எலன் ஜி உவைட் (டெஸ்டிமோனீஸ் ஃபார் த சர்ச், அதி. 3, பக். 476)